# புதன்கிழமை மாலே மோதலில் 5 இராணுவம் பலி

[யாழ்ப்பாணம்]

நேற்று முன்தினம் மாலே வலிகாமம் பகுதியில் விடுதலைப் புலிகளுடன் ஏற்பட்ட மோதலில் ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக நேற்று இராணுவ தலைமையகம் தெரிவித்தது.

நேற்று முன்தினம் மாலே ஆறு மணியளவில் விடுதலைப் புலிகள் இராணுவ அணிகள் மீது தாக்குதலைமேற்கொண்ட போதே 5 படையினர் கொல்லப்பட்டதாகவும் பலர் படுகாயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதனையும் சேர்த்து கடந்த

(5-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5. 00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆனி 30 இதழ் 160
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 14 - 7 - 1995

## தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தமே நடைபெறுகிறது

(கொழும்பு)

வடக்கில் நடைபெறும் யுத்தம் விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தமல்ல, தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தம் என்று நவ சமசமாஜக் கட்சி வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி நவ சமசமாஜக் கட்சி வெளியிட்ட அறிக்கையில் வடக்கில் பொதுமக்கள் பலர் விமானத் தாக்குதலால் இறந்துள்ளார்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

-ம-கி

# வலிகாமம் பகுதியில் நேற்றுடன் முதலாம்கட்ட இராணுவ நடவடிக்கை பூர்த்தி

[யாழ்ப்பாணம்]

**வலிகாமம் பகுதியில் கடந்த ஐந்து தினங்களாக மேற்கொள்ளப்பட்ட 'முன்னேற்ற பாய்ச்சல்' இராணுவ நடவடிக்கையின் முதலாம் கட்டம் நேற்றுடன் பூர்த்தியானதாக கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.**

முதலாம் கட்டம் பூர்த்தியானதைத் தொடர்ந்து அடுத்த கட்டத் தொடர் ஆரம்பிக்கப்படுமெனவும் கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்த ஐந்துநாள் இராணுவ நடவடிக்கையில் 23 இராணுவத்தினர் பலியானதாவும், 163 பேர் படுகாமடைந்ததாகவும் இராணுவம் கூறுகிறது. இரண்டு ஹெலிகொப்டர்களும், இரு விமானங்களும் விடுதலைப் புலிகளினல் சேதமாக்கப்பட்டன. இராணுவத்தினரின் உண்மையான இழப்புக்கள் குறித்த தகவல்கள் இதுவரை வெளியாகவில்லே.

இதேவேளை இந்த ஐந்து நாள் இராணுவ நடவடிக்கையின்போது கண்மூடித்தனமாக பொதுமக்கள் குடியிருப்புக்கள்' ஆலயங்கள், இடம் பெயர்ந்தோர் முகாம்கள்,

(6-ம் பக்கம் பார்க்க)

## சினேப்பர் தாக்குதலுக்கு கட்டுடையில் ஒருவர் பலி

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் கட்டுடைப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்த ஒருவர் நேற்றுமுன்தினம் தம் இருப்பிடத்திற்கு சென்று வீட்டிலிருந்து பொருட்களே மீட்டுவர முற்பட்ட வேளே இராணுவத்தினரின் சினேப்பர் தாக்குதலுக்கு இலக்காகி மரணமாஞர்.

கட்டுடையைச் சேர்ந்த சரவணமுத்து (வயது 60) என்பவரே மரணமானவராவார்.

இவரின் சடலம் யாழ். போதனு வைத்தியசாலேயில் ஒப்படைக்கப்பட்டு விசாரணையின்பின் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. 90-கி

## அகோர ஷெல் வீச்சுக்கு சங்கரத்தையில், இருவர் பலி

(யாழ்ப்பாணம்)

சங்கரத்தைப் பகுதியில் நேற்று இடம்பெற்ற அகோர ஷெல் வீச்சுக்களால் இருவர் ஸ்தலத்திலேயே துடிதுடித்துப் பலியாகினர். மூவர் படுகாயமடைந்தனர்.

நேற்று பகல் 11-30 மணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றது. இச்சம்பவத்தின் போது அடுத்தடுத்து ஏவப்பட்ட ஷெல்களினல் அப்பகுதியில் இருந்த பனந்தோப்புகளில் நூற்றுக் கணக்கான பனேகள் துண்டு துண்டாக வெட்டி சிதறடிக்கப்பட்டன.

இச்சம்பவத்தின்போது புன்னேலக்கட்டுவனேச் சேர்ந்த சின்னத்துரை கண்ணலிங்கம் [31 வயது, மாணிக்கம் சிவசூரி (19 வயது) ஆகிய இருவருமே உயிரிழந்தவர்களவர். இவர்களது சடலங்கள் அங்கிருந்து

(6-ம் பக்கம் பார்க்க)

## அரசுக்கு எதிராக குழப்பம் விளேவிக்க தெற்கில் முயற்சி

[கொழும்பு]

நாளே 15ம் திகதி கொழும்பில் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டம் மற்றும் குழப்பங்களே ஏற்படுத்த எதிரணியினர் திட்டமிட்டு வருவதாக கொழும்புச் செய்திஒன்று தெரிவிக்கிறது,

ஜே. வி. பி. இயக்கமும் அரசுக்கு எதிரான நடவடிக்கைகளே அன்றையதினம் நடாத்த திட்டமிட்டிருக்கின்றது.

நிறைவேற்று அதிகாரஜனதிபதி முறையை நீக்குவதற்கு அரசு அறிவித்திருந்த காலக்கெடு இம்மாதம் 15ம் திகதியுடன் பூர்த்தியாவதை முன்னிட்டே அரசுக்கு எதிராக குழப்பங்களே அன்றிலிருந்து தொடர எதிரணிகள் திட்டமிடுவதாகவும் தகவல்கள் கூறுகின்றன. கி

## ஷெல் தாக்குதலே அடுத்து பிரெஞ்சு வைத்தியர் குழு கிளிநொச்சியிலிருந்து வெளியேறியது

[யாழ்ப்பாணம்]

ஆனேயிறவு இராணுவத்தினர் கிளிநொச்சியை நோக்கி மேற்கொண்ட ஷெல் தாக்குதலேயடுத்து கிளிநொச்சி வைத்தியசாலேயில் கடமையிலிருந்த பிரெஞ்சு வைத்தியகுழு அங்கிருந்து வெளியேறியுள்ளன

இச்சம்பவத்வையடுத்து இப்பகுதி மக்கள் பெரும் அவல நிலேயை எதிர்நோக்கியிருப்பதாக அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

இதனேயடுத்து கிளிநொச்சி வைத்தியசாலேயில் சத்திர சிகிச்சைகள் ஸ்தம்பிதமடைந்திருப்பதாக அங்கிருந்துவரும் செய்திகள் கூறுகின்றன. கி

## யுத்தத்தில் பொதுமக்களே அதிகம் பாதிப்புற்றனர்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் தற்போது நடக்கும் யுத்தத்தினல் பொதுமக்களே அதிகம் பாதிப்படைந்துள்ளனர் என்று யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வந்த திருமதி அஞ்சலா தம்பியப்பா என்ற கிறிஸ்தவ துறவி ஒருவர் தெரிவித்ததாக பி. பி. சி. சிங்கள சேவை தெரிவித்தது.

திருமதி அஞ்சலா தம்பியப்பா யாழ்ப்பாணத்தில் நடக்கும் இந்த யுத்தத்தை பற்றி மேலும் விபரிக்கையில், யாழ்ப்பாண போதனு வைத்தியசாலேயில் சென்று பார்த்த போது 150க்கு மேற்பட்ட சடலங்களேக் கண்டேன். அந்தச் சடலங்கள் எல்லாம் பொதுமக்களுடையது.

(6ம் பக்கம் பார்க்க)

## இராணுவ படுகொலேகளே தடுக்க அரசின் மீது அழுத்தம் பிரயோகிக்க கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

தமிழ் மக்கள் மீதான இராணுவப் படுகொலேகளேத் தடுத்து நிறுத்த இலங்கை அரசின்மீது அழுத்தத்தைப் பிரயோகிக்குமாறு யாழ். பல்கலேக் கழக ஆசிரியர் சங்கம் சர்வதேச சமூகத்தைக் கோரியுள்ளது.

இது தொடர்பான நீண்ட அறிக்கையொன்றை இச்சங்கம் கொழும்பிலுள்ள சகல வெளிநாட்டுத் தூதுவராலயங்களுக்கும் அனுப்பிவைத்துள்ளது. இந்த அறிக்கையில் கடந்த 9ம் திகதி முதல் இராணுவத்தினர் மேற்கொண்டு வரும் தாக்குதலினல் பொதுமக்களுக்கும் அவர்களது உடமைகளுக்கும் ஏற்பட்டுள்ள இழப்புக்கள் திகதி வாரியாக விபரமாக கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் சில பகுதிகள் வருமாறு:

விடுதலைப் புலிகளிடமிருந்து

(6ம் பக்கம் பார்க்க)

## வீடு பார்க்க சென்ற பலர் மீண்டும் திரும்பவில்லே

(யாழ்ப்பாணம்)

தற்போது இடம்பெற்று வரும் இராணுவ நடவடிக்கைகளில் இடம் பெயர்ந்து வந்து மீண்டும் சுமுகமான நேரத்தைப் பயன்படுத்தி பொருட்களே எடுத்துவருவதற்காகச் சென்ற பலர் மீண்டும் திரும்பிவராமல் காணமற் போயுள்ளனர்.

இச் சம்பவத்தில் கடந்த திங்கட்கிழமை இதேபோல பொருட்களே எடுத்துவருவதற்காகச் சென்ற சிவக்கொழுந்து சிவசுப்பிரமணியம் (24வயது) வைத்திலிங்கம் வில்வராசா (31 வயது) ஆகிய இருவரும் வீடு திரும்பவில்லே. (90-கி(

# இதுவரைக்கும் 6,228 படையினர் வட-கிழக்கில் உயிரிழந்தனர்

(கொழும்பு)
1981ம் ஆண்டிலிருந்து இவ்வாண்டு ஏப்ரல் 26ம் திகதி வரை வடக்கு, கிழக்கில் 6,228 சிறீலங்கா படையினர் உயிரிழந்துள்ளனர்' இவ்வாறு ராவய பத்திரிகை தகவல் வெயிட்டுள்ளது.

அப்பத்திரிகை மேலும் தெரிவிப்பதாவது: இக்காலப் பகுதியில் 7833 படையினர் காயப்பட்டும் 769 படையினர் காணுமல் போயுமுள்ளனர்.

வடக்கு, கிழக்கில் நடைபெற்று வரும் விடுதலைப்புலிகளுடனுன போரில் இராணுவத்தினர் மட்டும் 4281 பேர் உயிரிழந்துள்ளனர்.

இது தவிர 116 பொலிசாரும் கடற்படையைச் சேர்ந்த 168 பேரும் விமானப் படையைச் சேர்ந்த 121 பேரும் ஊர்காவற் படையைச் சேர்ந்த 171 பேரும் உயிரிழந்துள்ளனர்.

3 ம் ஈழப் போர் ஆரம்பித்த பின்னர் படையினர் தரப்பிலான இழப்புகள் அதிகரித்து வருவதும் குறிப்பிடத்தக்கது. ர-ரி

## வரி விளம்பரம்

### புலமைப் பரிசில்

ஆண்டு-5 புலமைப் பரிசில் தேர்வுக்கான வினுப் பத்திரம் 1, வினுப் பத்திரம் 2க்குரிய "பொது விவேகம், பொதறிவு" வெளிவந்துவிட்டது. வெளியீடு: சுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம். எ-5077

### சேவை

போட்டோ ஸ்ரட் - 5/- (காகிதாதிகள்தனி)பெருப்பித்தும் (205%) சிறுப்பித்தும் (48%) கொடுக்கப்படும். 100 ரோணியோ 19/- இரு பக்கம் 29/- ஸ்ரென்சில்-10/- ரைப்பிங் தமிழ் - 7/- ஆங்கிலம் - 8/50. யாழ். மருந்தகம், 470 (250) ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (எ 5075

### காணவில்லை

மானிப்பாய்ச் சந்திக்கும் ஐந்து சந்திக்கும் இடையில் கதிரவேலு கனகரத்தினம், கதிரவேலு சசிகுமார் கேதீஸ்வரன் வாதீஸ்வரன் ஆகிய மூவரின் மாணவ முத்திரைகளும், நிசல்றறும் 13-7-95 காலை தொலைந்து விட்டது. கண்டெடுத்தவர்கள் புங்குடுதீவு ப. நோ. கூ. சங்க 14ம் கிளையில் ஒப்படைக்குமாறு வேண்டுகின்றேன். அறிவித்தவர் கே. ரதிதேவி. (சி-1556)

## இன்று

(கொழும்புத்துறை)
தமிழீழ நிர்வாக சேவை கூட்டுறவுப் பகுதியின் அனுசரணையுடன் கூட்டுறவுச் சங்கங்களின துரித கணக்காய்வு நடவடிக்கைகளுக்கான கலந்துரையாடல் கூட்டம் ஒன்று இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3. 00 மணிக்கு யாழ் மாவட்ட கூட்டுறவுச்சபை மண்டபத்தில இடம் பெறும். 154- ரி

0 0

(கொழும்புத்துறை)
அரியாலை - பிரப்பங்குளம் ஸ்ரீ மகாமாரி அம்மன் ஆலயத்தின் வருடாந்த இலட்சார்ச்சனைத் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 8. 00 மணிக்கு இடம்பெறும். 154- ரி

# மீன்பிடிபடகுகளை குறிவைத்து இராணுவம் துப்பாக்கிச் சூடு

[யாழ்ப்பாணம்]
நிலா வெளிச்சத்தில் கடலில் மீன்பிடிப் படகை அவதானித்த மண்டைதீவுப் படையினர், குருநகர் கடற்பகுதியில் நின்ற படகுகளை நோக்கிச் சரமாரியான துப்பாக்கிப் பிரயோகத்தையும், ஷெல் தாக்குதலையும் மேற்கொண்டனர்.

நேற்று முன்தினம் இரவு அரை மணி நேரமாகப் படையினர் இத்தாக்குதலை மேற்கொண்டனர்.

நிலா வெளிச்சத்தில் மீன்பிடிப் படகுகளைக் கண்டு படையினர் மிரண்டு துப்பாக்கிப் பிரயோகத்தையும், ஷெல் தாக்குதலையும் மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

படையினரின் இத்தாக்குதலால் கரையோரப் பகுதி மக்கள் பீதியடைந்து காணப்பட்டனர்.

இதேபோன்று படையினர் ஷெல் தாக்குதல் மற்றும் துப்பாக்கிப் பிரயோகத்தை அடிக்கடி நடத்தி வருவதால் இககடலில் மீன் பிடிப்பதற்கு மீனவர்கள் அச்சம் கொண்டுள்ளனர். 170 ரி

## அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)
சகல வெகுஜன அமைப்புக்களின் உறுப்பினர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று இன்று 14ம் திகதி மாலை 2. 00 மணிக்கு யாழ். நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

# ஜெரி டி சில்வாவுக்கு பதவி நீடிப்பு!

(கொழும்பு)
இராணுவத் தளபதி ஜெரி டி சில்வாவுக்கு அரசாங்கம் அடுத்த வருடம் மே மாதம் வரை பதவி நீடிப்பு வழங்கி உள்ளது.

புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்ட படைத் தளபாடங்களைப் பயன்படுத்துவது தொடர்பான நடவடிக்கைக்காகவே இப்பதவி நீடிப்பு வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் கடற்படைத் தளபதி மொஹான் சமரசேகராவுக்கும் பதவி நீடிப்புக் கிடைக்க இருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கும் அதே வேளை, புலிகளுடனுன சமாதானப் பேச்சுக்களில் கலந்து கொண்ட சிறி பீரிஸுக்கும் மேஜர் ஜெனரல் தரப் பதவி உயர்வும் வழங்கப்பட்டுள்ளது கே ரி

# காயமடைந்தவர்களுக்கு உடுபிடவை அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)
வலிகாமத்தில் ஷெல் விமானக்குண்டு வீச்சுகளுக்கு இலக்காகி, காயப்பட்டு யாழ். போதனு வைத்தியசாலையில் சிகிச்சைபெறும் நோயாளர்களுக்கு நோயாளர் நலன்புரிச்சங்கம் உடுபுடவைகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

யாழ் வைத்தியசாலையில் நிர்க்கதியான நிலையில் சிகிச்சை பெறும் சில நோயாளர்களையும் நோயாளர் நலன் புரிச்சங்கம் பராமரித்துவருகிறது.

இதனைவிட நோயாளர்களுக்கு இளநீர் பழம் மற்றும் சமைத்த உணவு பார்சல்களையும் மேற்படி சங்கம் வழங்கி வருகிறது. 170-ரி

## விடைதாள்கள் அனுப்பிவைப்பு

(குருநகர்)
அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெறற பல பரீட்சைகளின் விடைத்தாள்களும், பரீட்சை சம்பந்தமான ஆவணங்களும் பருத்தித்துறையிலிருந்து திரு கோணமலைக்குச் சென்றுள்ள ஹபறண கப்பல் மூலம் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன.

கொழும்பு பரீட்சைத் திணைக்களத்தில் ஒப்படைப்பதுக்காக யாழ் கல்வித்திணைக்கள கல்வி அதிகாரி ஒருவர் சென்றுள்ளாா எனத் தெரிவிக்கப் படுகிறது. 95-ரி

# 'மாகோ' கப்பல் பொருட்களுடன் வருகிறது

(யாழ்ப்பாணம்)
கொழும்பு துறை முகத்தில் பொருட்களை ஏற்றிக்கொண்டு நிற்கும் பாகோ கப்பல் இன்னும் சில தினங்களில் பருத்தித்துறை துறை முகத்திற்கு வந்து சேருமென அரசாங்க அதிபர் திரு கே. பொன்னம்பலம் தெரிவித்தார்.

இக்கப்பலில் அத்தியாவசிய உணவுப்பொருட்களுடன்தேங்காய் எண்ணை, சவர்க்காரம், ஆகியபொருட்களும் யாழ். மாவட்டதிலிருந்து தேசிய அடையாள அட்டை பெறுவதற்கு விண்ணப்பம் செய்திருந்த விண்ணப்பதாரிகளில் 3 000 விண்ணப்பதாரிகளுக்கான அடையாள அட்டைகள் எடுத்து வரப்படுவதாகவும், யாழ். மாவட்டத்துக்கான தபால் பொதிகள் ஏதும் இக்கப்பலில் எடுத்துவரப்படவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார். 162-ரி


# ரேஸ்ட் லைன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிட்டட்டில் பணிபுரியும் சகல ஊழியருக்குமான

# அறிவித்தல்

ரேஸ்ட் லைன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிட்டட்டில் பணிபுரியும் சகல ஊழியர்களையும் 14-07-95 அன்று எம்முடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

நிர்வாகம்

(ஏ-5101)


# புகையிரதத் திணைக்கள ஓய்வூதியர்களுக்கு

(மானிப்பாய்)
யாழ். மாவட்டத்திலுள்ள புகையிரதத் திணைக்கள ஓய்வூதியர்களின் ஓய்வூதியத்தை யாழ். கச்சேரிக்கு மாற்றம் செய்த பின்னர், இதுவரை தற்காலிக ஓய்வூதியம பெற்றுக்கொள்ளாதவர்களும் தற்காலிக ஓய்வூதியத்தை 95 யூன் மாதம் வரை பெற்றவர்களும் பின்வரும் ஆவணங்களுடன் யாழ். செயலக ஓய்வூதியக் கிளையுடன் தொடர்பு கொள்ளுமாறு செயலகப் பிரதம கணக்காளர் சு. சிலபாலன் கேட்டுள்ளார்.

மேற்படி ஓய்வூதியர்கள் புகையிரதத் திணைக்களத்திஞல் வழங்கப்பட்ட ஓய்வூதிய அடையாள அட்டை, அது இல்லாத பட்சத்தில் புகையிரதத் திணைக்கள ஓய்வூதியர் என்பதை உறுதிபபடுத்தும் ஏதாவது ஆவணம், பங்குனி 95க்கு முன்னர் 4 மாதங்களுக்கு வங்கியில் பெற்றஓய்வூதியத்தொகையை உறுதிப்படுத்தும் கடிதம், ஓய்வூதியம் இதுவரை பெறுதிருந்தால் அல்லது பெற்றிருந்தால், அந்த விபரத்தைக் குறிப்பிட்டு ஒரு சத்தியக் கடதாசி, அத்துடன் தேசிய அடையாள அட்டை என்பன. 71 ரி

## பிரிவுபசார வைபவம்

(பண்டத்தரிப்பு)
யாழ். சுகாதார சேவை மாகாண பிரதிப் பணிப்பாளராக கடமையாற்றி பதவியிலிருந்து ஓய்வுபெற்ற டாக்டர் பி. இரத்தின சபாபதிக்கு மேற்படி சுகாதார சேவை மாகாண பிரதி பணிப்பாளர் பணிமனை ஊழியர் நலன்புரிச் சங்கத்திஞல் பிரிவுபசார வைபவம் ஒன்று நடாத்தப் பட்டது. -72


யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

நல்லூர் கந்தசுவாமி கோவில்

1995ஆம் ஆண்டு

மகோற்சவ கால

# தற்காலிக கடைகள்

மேற்படி விடயமாக இதே பத்திரிகையில் ஏற்கனவே வெளிவந்த விளம்பரம் தொடர்பாக கேள்விப் படிவம் பெறுவதும்கேள்வி ஏற்பதுமான திகதிகள் பின்வருமாறு நீடிக்கப்பட்டுள்ளது. என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கேள்விப்படிவம் பெறும் இறுதித்திகதி:
20-07-95 பி. ப. 3-00 மணி

கேள்வி ஏற்கப்படும் இறுதித் திகதி:
21-07-95 ந. ப. 12-00 மணி

வே. பொ. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்ற அலுவலகம்.
யாழ்ப்பாணம். 1995-07-13,

[ஏ-5102]


# சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கு நலன்புரிச் சங்கம் உதவி

(யாழ்ப்பாணம்)
குண்டுவீச்சு, ஷெல் தாக்குதலுக்கு இலக்காகி காயப்பட்டு யாழ். போதனு வைத்தியசாலையில் சிகிச்சைபெறும் நோயாளர்களுக்கு யாழ் நலன்புரிச் சங்கம் சமைத்த உணவு, மற்றும் பால்மா, பிஸ்கட் போன்றவற்றை வழங்கிவருகின்றது.

இதனைவிட நோயாளர் நலன்புரிச் சங்க தொண்டர்கள், உறவினர், பெற்றோர் இன்றி தவிர்க்கும் நோயளர்களை பராமரித்து வருகின்றனர். 90-170-கி-சி

### மணிவாக்கு

கெட்டதையெல்லாம் நம்பாதே; ஆசைப்பட்டதையெல்லாம் செய்யாதே; தெரிந்ததையெல்லாம் சொல்லாதே; பார்த்ததையெல்லாம் வாங்காதே; இருப்பதையெல்லாம் உபயோகிக்காதே; அப்படியானல் நீ எப்பொழுதும் மகிழ்ச்சியாய் இருப்பாய்.

— மார்ட்டீன் லூதர்

## நமது நோக்கு

### யுத்தத்தின் விளைவு

மனித உரிமைகள் மீறப்படமாட்டா, அவை பேணப்படும் என்றெல்லாம் வெளிநாடுகளுக்கு வேடம் போட்டுக் காட்டி பண உதவிகளையும் அனுதாபங்களையும் பெற்ற சந்திரிகா தமிழ்மக்களை இனக்கொலை புரிந்தும் அவர்களது வாழ்விடங்களிலிருந்து இடம்பெயரச் செய்தும் வெறியாட்டம் ஆடுகிருர். இடம்பெயர்ந்த தமிழ் மக்களின் தொகை 1,83,000 ஆகப் பதியப்பட்டுள்ளது. இதுமட்டுமா? கொழும்பில் உள்ள தமிழர்களை எதுவித காரணமுமின்றி நேரடியாகக் கைது செய்து சித்திரைவதைக்குள்ளாக்குகிருர். அதுவுமல்லாமல் பல தமிழ் இளைஞர்கள் மறைமுகமான முறையில் கைது செய்யப்படுகின்றனர். பின்னர் அவர்களின் உடல்கள் ஆறுகளிலும் வாவிகளிலும் மிதக்கின்றன.

சந்திரிகாவின் அரசு தனது இராணுவ நடவடிக்கை மூலம் தமிழ்மக்களை இடம்பெயரச் செய்துவிட்டு எஞ்சியிருக்கும் அதாவது ஓடித்தப்ப முடியாத வயோதிபர்களையும் நோயாளர்களையும் வைத்துக்கொண்டு தான் அவர்களை விடுதலைப்புலிகளிடமிருந்து விடுவித்துவிட்டதாக கூறுகிறது. அதுவுமல்லாமல் அவர்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்குவதாகவும் மின்சார வசதி செய்துகொடுக்கப்போவதாகவும் அறிவிக்கிறது. மக்கள் தங்களை குதூகலமாக வரவேற்கிருர்கள் என்றும் கூறிக்கொள்கிறது. அந்தமக்கள் விடுவிக்கப்படவுமில்லை. காப்பாற்றப்படவுமில்லை. உண்மையில் அவர்கள் சிறை பிடிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு வழங்குவதற்கு 3000 அடையாள அட்டைகளும் கொண்டு வரப்படுகிறதாம். அடையாள அட்டை வழங்குவது இராணுவ நடவடிக்கையின் ஓர் அம்சம். தாம் கைப்பற்றிய இடங்களில் வாழ்பவர்களை சுலபமாக அடையாளம் காண்பதற்கே அடையாள அட்டைகள் வழங்கப்படுவது. தீவுப்பகுதியில் எஞ்சியிருப்போருக்கும் இவ்விதம் தான் அடையாள அடடைகள் வழங்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா அரசு தனது இனப்படுகொலைத் திட்டத்தை செயல்படுத்தும் வகையில் போரை முன்னெடுத்துள்ளமை தமிழர்களை அழிக்கும் அதேநேரத்தில் சிங்கள இளைஞர்களை ஏமாற்றும் செயலாகவும் அமைந்துள்ளது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனுதிபதி முறையை யூலை 15க்குள் மாற்றி அமைப்பதாக வாக்குறுதி கொடுத்துவிட்டு அதை நிறைவேற்ற முடியாத, நிறைவேற்ற விருப்பம் இல்லாத இன்றைய நிலையில அரசியல் அமைப்பை மாற்றுவதற்காகவே தேர்தலில் பெருந்தொகையாக வாக்களித்த சிங்களவர்களின் கோபத்துக்குள்ளாகாது அவர்களின் மனத்தை வேறு திசையில் மாற்றுவதற்காக தமிழ் மக்கள்மீது யுத்தத்தைத் தீவிரப்படுத்தியுள்ளது.

யுத்தம் தீவிரப்படுத்தப்பட்டதும் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படுவதும், படுகாயத்துக்குள்ளாக்கப்படுவதும், மக்கள் பெருமளவில் இடம்பெயர்ந்தமையும் அரசுக்கு எதிராக பல பக்க விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது.

தான் வெல்ல முடியாத போரில் இறங்கியுள்ள அரசு தனது மனித உரிமை மீறல்களால் உலக நாடுகளின் அதிருப்திக்குள்ளாகியுள்ளது. இப்பவே வெளிநாட்டு இராஜதந்திரிகள் தமது எதிர்ப்பை வெளிப்படையாகத் தெரிவிக்கத் தொடங்கிவிட்டனர்.

சிறிலங்கா அரசு தமிழ் மக்களுக்கு எதிரான போரில் வெல்ல முடியாதென்ற எண்ணம் சிங்கள மக்கள் மத்தியில் படிப்படியாக வளரத் தொடங்கியுள்ளது. இது விரைவில் சிறிலங்காவில் அரசியல் கொந்தளிப்பை ஏற்படுத்தி சந்திரிகாவின் ஆட்சியையே ஆட்டம் காணச் செய்துவிடும்.

அதுவுமல்லாமல் இது வெல்லமுடியாத போர் என்பதைஇத்தறுதியில் சாதாரண இராணுவத்தினரும் உணரத் தொடங்குவர் அத்தகைய எணணம் அவர்களது மனேபலத்தை கட்டாயம் பாதிக்கும், அதனுல் அரசுக்கு மேலும் மேலும் தோல்விகள் ஏற்படும்.

## அச்சுவேலி மாணவரின் கல்வி போதனைக்கு மாற்று ஏற்பாடு

(நல்லூர்)

சில வாரங்களுக்கு முந்திய இராணுவ நடவடிக்கையினுல் இடம்பெயர்ந்து வெவ்வேறு இடங்களில் இருக்கும் அச்சுவேலி மகாவித்தியாலய மாணவர்களின் நன்மைகருதி பின்வரும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக கல்லூரி அதி

(5ம் பக்கம் பார்க்க)

## இடம்பெயர்ந்தோர் முகாம்களில் தொற்றுநோய் பரவும் அபாயம்

(யாழ்ப்பாணம்)

தற்போது இடம்பெற்று வரும் இராணுவ நடவடிக்கையால் அப்பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து அகதி முகாம்களில் தங்கியிருக்கும் மக்களிடையே தொற்றுநோய்கள் பரவக்கூடிய ஆபத்துக்கள் இருப்பதாகச் சுகாதாரத் துறையினர் தெரிவித்துள்ளனர்

குறிப்பாகச் சில இடங்களில் கண்நோய் இருப்பது அவதானிக்கப்பட்டு இருப்பதாகவும், இலேசாக ஏனையோருக்குத் தொற்றக்கூடிய இந்நோயைத் தவிர்க்க வைத்திய ஆலோசனைகளுக்கேற்ப நடந்துகொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

திறந்தவெளிகளில் மலம் கழிப்பதைத் தவிர்த்தல, கொதித்து ஆறிய நீர் பருகுதல், தூய்மை பேணுதல் ஆகிய சுகாதார முறைகளைப் பின்பற்றுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது

காயம் அடைந்தவர்களின் இரத்த ஒழுக்கு நிறுத்தப்படாமல் வைத்தியசாலைக்கு நேரடியாக எடுத்துச் செல்லப்படுவதால், மேலதிக இரத்த ஒட்டத்தினுல் உயிர்ச்சேதம் ஏற்படுகிறது: இதனைத் தவிர்க்க ஒத்துழைப்புத் தருமாறு சுகாதாரத்துறையினர் கேட்டுக்கொள்கின்றனர்:

கேரி

## இடம்பெயர்ந்த மக்களுக்கு மாநகரசபை சுகாதார வசதி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரப் பகுதியில் தங்கியிருக்கும்இடம்பெயர்ந்த மக்களுக்கான சகல சுகாதார வசதிகளும் செய்துகொடுத்திருப்பதாக யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி திரு. தெய்வேந்திரன் தெரிவித்தார்.

இடம் பெயர்ந்தவர்களுக்கான குடிநீர், மலசலகூடம், மருத்துவம் போன்ற வசதிகளை மாநகராட்சி மன்றம் மேற்கொண்டு வருகின்றது.

மாநகரசபையால் தற்காலிகமாக அமைக்கப்பட்ட மலசலகூடங்கள், குடிநீர்தாங்கிகள் என்பன முகாம்களில் வைக்கப்பட்டுளன.

ஒவ்வொரு முகாம்களுக்கும் சுகாதார ஊழியர்கள் நிரந்தரமாக கடமையிலீடுபடுத்தப்பட்டுள்ளனர்.

முகாம்களில் மக்களிடையே தொற்றுநோய்கள் பரவாதிருக்க மக்களிடையே சுகாதாரத்தை எவ்வாறு கையாள வேண்டியதுபற்றி போதனைகளை சுகாதார ஊழியர்கள் மேற்குகொண்டுவருகின்றனர்.

மக்களிடையே தொற்றுநோய்கள் பரவாதிருப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் மாநகர சுகாதார வைத்திய அதிகாரி மேலும் கூறினர்.

170-ரி

## சண்டிலிப்பாய், உடுவில் கல்விக்கோட்ட காரியாலயங்கள் யாழ். கல்வி வலயத்திற்கு மாற்றம்

(குருநகர்)

மானிப்பாய் இந்துக்கல்லூரியில் இயங்கிவந்த தெலலிப்பழை, சண்டிப்பாய்க்கல்விக்கோட்டங்களின் அத்தியாவசியமான பொருள்கள் அங்கிருந்து யாழ் கல்வி வலயம் -1 ற்கு எடுத்துவரப்பட்டன.

இவ்விருகல்விக் கோட்டங்களின் ஆசிரியர் சம்பளபேரேடுகள், ஆசிரியர்கோவைகள் இங்கு எடுத்துவரப்பட்டுள்ளதாகவும் அங்குள்ள மற்றும் பொருட்களை எடுத்துவரநடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் ஆசிரியர் சம்பளவேலைகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட உள்ளதாக இவ்வேலைகள் யாழ் கல்வி வலயத்தில் இயங்கவுள்ள தெல்லிப்பழை,சண்டிலிப்பாய்க் கல்விக் கோட்டங்களின் தற்காலிக அலுவலகத்திலேயே நடைபெறுவதாகவும் இக்கல்விக்கோட்டத்தைச் சேர்ந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

மேலும் உடுவில் கல்விக் கோட்டத்தில் உள்ள இவ்வருடத்திற்குரிய ஆசிரிய சம்பளப் பேரேடுகளை உடனடியாக யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வருமாறு உடுவில் கல்விக் கோட்டப்பிரதிக்கல்விப்பணிப்பாளர் இங்கு கடமையாற்றும் ஊழியர்களைப்பணித்துள்ளார் எனயாழ் கல்வித்திணைக்களம் மூலம் தெரியவந்துள்ளது.

95-ரி

### பலதும் பத்தும்

## மூன்று பொம்மைகள்

சீரழிந்த சமுதாயத்தைத் திருத்தி எப்படி முன்னேற்றலாம் எனச் சிலர் ..... ஒரு ஞானியிடம் போய்க் கேட்டார்களாம்.

சர்க்கரையால் மாத்திரம் செய்த பொம்மை, டஞ்சினுல் மாத்திரம் செய்த பொம்மை, களிமண்ணுல் செய்த பொம்மை, ஆகிய மூன்று பொம்மைகளை தனித்தனியாக நீருள்ள மூன்று பாத்திரங்களுக்குள் போட்டார் அந்த ஞானி.

நீரை உறிஞ்சிக்கொண்ட பொம்மைபோலச் சிலர் சுயநலத்தோடு பிறர்பொருளைச் சுருட்டி வாழ்கிருர்கள்; களிமண் கரைந்து நீரைக்கெடுத்தது போலச் சிலர் சமுதாயத்தைக் கலக்கிக் கெடுக்கிருர்கள்; சர்க்கரையோ தான் கரைந்து முழுநீரையும் இனிமையாக்கி விட்டதுபோலத் தியாகிகள் வாழ்கிருர்கள்.

எப்படி வாழ்ந்தால் சமுதாயம் சீரடையும் என்பதை விளக்கினுராம் ஞானி அந்தப் பொம்மைகள் மூலம்!

—மயூரன்

### வெள்ளி விருந்து

## உருவகமும் உட்பொருளும்

உருவக அலங்கார இன்பத்தை நுகரும் அறிஞர்கள்' அவைகட்குரிய பொருளை உணர்ந்தும் இன்புறுவார்கள் உருவக அளவோடு நின்று பயன்பெறுவோரைப் பற்றி ஈண்டுக் கருதவேண்டுவதில்லை, முன்னைநாள் காவியக்காரர்கள் உருவகம் என்னும் உடலில் பொருள் என்னும் உயிரை புகுத்தும் கடைப்பிடித்து நின்ருர்கள். பின்னை நாளில் தோன்றிய பௌராணிகர் வெறும் உருவகங்களில் (அமையும் அவையற்ற போலிகள்) கருத்தைச் செலுத்திக் காவிய உலகிற்கே கேடு சூழ்ந்தார்கள்.

சூரன் போரில் அறியக்கிடப்பதென்னை? ஒவ்வோர் உள்ளமும் போர்க்களம். அக்களத்தில் நாடோறும் சூரனுக்கும் முருகனுக்கும் போர் நடந்த வண்ணமாயிருக்கிறது. சூரன் முனைப்பு முருகன் அருட்கடவுள். ஒவ்வோர் உயிரிடத்தும் முனைப்பு உண்டு. அம்முனைப்பால் விளைவது தீமை என்பது வெள்ளிடைமலை. அத்தீமைக்கு முதலாகவுள்ள முனைப்பைக்களைய வேண்டுவது உயிரின் கடமையன்றே?

திரு. வி. கல்யாணசுந்தரனுர் (முருகன் அல்லது அழகு')

## இர்ராசி பலன்

14-07-1995

வெள்ளிக்கிழமை

[தமிழுக்கு ஆனி- 30]

துதியை பி ப 12-57வரை; திருவோணம் பி. ப. 4-23; இராகுகாலம் காலை 10-30 முதல் 12 வரை; சுப வேளை காலை 6 மணிமுதல் 7-30 வரை

மேடம்: தொழில் உறவு, மகிழ்ச்சிப்பிரவாகம், காரிய சித்தி

இடபம்: குற்ற உணர்வு, வீண்விரயம், அஞ்ஞான வாசம்

மிதுனம்:- வீண் கோபம். குடும்ப வேற்றுமை, அலைச்சல்

கடகம்:- பிதாவழி உறவு, பொருள் வரவு, பயணம்

சிங்கம்: சுபகாரியம், முயற்சி பலிதம் அதிகாரம்

கன்னி: மனப்போராட்டம், பணக்கஸ்டம், பதட்டம்

துலாம்: கலந்தாலோசனை, சயனசுகம், நற்பணி

விருச்சிகம்: தெய்வீகப்பணி, கடும் உழைப்பு, நண்பர் சகவாசம்

தனுசு: உள்ளக்குமுறல், ஆதரவற்றநிலை, பழைய நினைவுகள்

மகரம்: தொழில் லாபம், தந்திரோபாயம், பிறர்க்கு உதவி

கும்பம்: குளம்பித்தெளிதல் எதிரிகள் பயம், வேதனை

மீனம்: புகழ்ந்துபேசுதல், பெரியோர் அறிவுரை, நற்செய்தி

— ஜோஸ்யர்

# இஸ்ரேல் - பாலஸ்தீன ஒப்பந்தம் அமெரிக்காவில் கைச்சாத்து

(ஜெருசலம்)

வாஷிங்டனில் அடுத்த மாதம் பாலஸ்தீன விடுதலை இயக்கம்-இஸ்ரேல் ஒப்பந்தம் கையெழுத்தாகவுள்ளது.

அமெரிக்க அதிபர் பில் கிளிங்டனின் முன்னிலையில் பாலஸ்தீன சுயாட்சி பகுதிகளின் எல்லைகளை விரிவுபடுத்தவும், நிர்வாகத்தின் முழு உரிமையையும் பாலஸ்தீனர்களுக்கு தரவும் வழிசெய்யும் ஒப்பந்தம் ஒன்றில் பாலஸ்தீன விடுதலை இயக்கமும் இஸ்ரேலும் இணைந்து அடுத்த மாதம் முதல் வாரத்தில் கையெழுத்திடும் என பி. எல். ஓ. தலைவர் ஜசீர் அரபாத் கூறியுள்ளார்.

இஸ்ரேலில் சிறைப்பட்டுள்ள 6 ஆயிரம் பாலஸ்தீன கைதிகளை விடுதலைசெய்தல், எதிர் வரும் அக்டோபரில் பாலஸ்தீன சுயாட்சி பகுதிகளில் தேர்தல் நடத்துவது ஆகிய முக்கிய அம்சங்களும் இந்த ஒப்பந்தத்தில் இடம்பெறும் என ஜசீர் அரபாத் மேலும் தெரிவித்தார். கே-ரி

# தலதா மாளிகையை பாதுகாக்க உத்தரவு

(கொழும்பு)

கண்டி தலதா மாளிகையின் பாதுகாப்பை தீவிரப்படுத்துமாறும், இதுதொடர்பாக சகல நடவடிக்கைகளையும் உடனடியாக மேற்கொள்ளுமாறும், ஜனாதிபதி திருமதி சந்திரிகா சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அவசர கட்டளையை பிறப்பித்துள்ளார்.

தலதாமளிகையை சுற்றியுள்ள பாதுகாப்புக்கதவுகளை உடனடியாக சீர்செய்யும் படியும், மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு 20 - லட்சம் ரூபாவை ஒதுக்கும் படியும், ஜனாதிபதி கட்டளைபிறப்பித்துள்ளார். வி-ரி

# ஜெயின் கமிஷன் முன் ஜெயலலிதா சத்தியக் கடதாசி சமர்ப்பிப்பார்

(சென்னை)

ராஜீவ் கொலை தொடர்பாக திரு. சுப்பிரமணிய சுவாமி சுமத்திய குற்றச்சாட்டுக்கள் பொய்யானது எனக் கூறி தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா விரிவான சத்தியக் கடதாசியை ஜெயின் கமிஷன் முன் சமர்ப்பிக்கவுள்ளார்.

மாநில வருவாய் துறை அமைச்சர் திரு. எஸ். ரி சோமசுந்தரம் இது பற்றி தெரிவிக்கையில், ஜெயின் ஆணைக்குழு போன்ற மிகவும் மதிப்பு வாய்ந்த நீதிச் சேவை அமைப்பை திரு. சுப்பிரமணியசுவாமி தனது குறுகிய அரசியல் நோக்கங்களுக்கு பயன் படுத்த முயற்சி செய்கிறார்.

கடந்த சில மாதங்களாக செல்வி. ஜெயலலிதாவின் பெயரை விடுதலைப் புலிகளுடன் தொடர்பு படுத்தும் வீண் முயற்சியில் திரு. சுவாமி கற்பனை செய்ய முடியாததும் நம்ப முடியாததுமான பல கதைகளை திரித்துக் கூறி தமிழக மக்களை ஏமாற்ற முயற்சி செய்து வருகிறார். இக் குற்றச்சாட்டுக்கள் சுப்பிரமணிய சுவாமியின் கற்பனையில் எழுந்தவையே அன்றி உண்மை எதுவும் அற்றது என்றார்.

ராஜீவ் கொலைபற்றி செல்வி ஜெயலலிதாவுக்கு தெரிந்திருந்ததாகவும் இது தொடர்பாக அவரை ஜெயின் கமிஷன் விசாரிக்க வேண்டுமென திரு. சுப்பிரமணிய சுவாமி கூறியிருந்ததும் தெரிந்ததே. சி- கி- ரி

# இரத்ததானம் செய்ய அவசர கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலை இரத்த வங்கியில் இரத்தத்திற்கு பலத்த தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

சகல குறூப் இரத்தங்களும் தற்போது தேவைப்படுவதாக இரத்த வங்கியினர் தெரிவித்துள்ளனர்.

தற்போதைய சூழ்நிலையை கருத்தில் கொண்டு காயப்பட்டவர்களுக்கு இரத்ததானம் வழங்க முன்வருமாறு பொது அமைப்புகள் மற்றும் பொது மக்களை வைத்தியசாலை இரத்தவங்கியினர் கேட்டுள்ளனர். 170-ரி-ஓ

# பர்மிய எதிர்க்கட்சி தலைவி சிறையிலிருந்து விடுதலை

(லண்டன்)

1989 ம் ஆண்டுமுதல் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்த பர்மிய எதிர்க்கட்சித் தலைவி ஆங் சாங் சுஜி விடுதலை செய்யப்பட்டார்.

சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்ற இவரை விடுதலை செய்ய வேண்டுமென்று ஐ. நா. உட்பட பல நாடுகள் நீண்ட காலமாக கோரிக்கை விடுத்து வந்தன.

இவரை விடுதலை செய்யுமாறு கோரி கொழும்பில் பெரும் ஆர்ப்பாட்டம் நடாத்தப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. வி- கி

# 'தமிழன் என்றால் புலிதான்' எனக்கூறி பொலிஸார் தாக்கினர்

(திருமலை)

ஜனாதிபதி திருமதி சந்திரிகாவினால் நியமிக்கப்பட்ட மனித உரிமைக்குழுவின் திருகோணமலை மாவட்ட உறுப்பினர் திரு ரொபின்சன் ஜோன்சன் பொலிஸாரால் தாக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதிக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது

மனித உரிமை மீறல் சம்பவமாக விசாரணை செய்வதற்காக மேற்படி உறுப்பினர் திருமலை சுங்க வீதியால் சென்று கொண்டிருக்கும் போது அவரை பொலிஸார் இடைமறித்து விசாரணை செய்தனர். அவர், தான் மனித உரிமைக் குழுவின் உறுப்பினர் என ஜனாதிபதியினால் வழங்கப்பட்ட அடையாள அட்டையைக் காண்பித்தார்.

இவரை விசாரணை செய்த காரியவசம் என்ற பொலிஸார் "மனித உரிமைக் குழு உறுப்பினர் என்றால் எனக்கென்னடா, தமிழன் என்றால் நீயும் புலி தானடா" எனக் கூறி அவரைத் தாக்கினாராம்.

இச் சம்பவம் கடந்த வாரம் திருமலையில் நடைபெற்றுள்ளது வி- சி

# அகதி முகாம்களுக்கு மேலதிக விளக்குகள்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகராட்சி மன்றப் பகுதிகளில் அமைக்கப்பட்டிருக்கும் சகல அகதிகள் முகாம்களுக்கும் மேலதிக விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

இடம் பெயர்ந்து முகாம்களில் தங்கியிருக்கும் மக்களின் நன்மை கருதி சகல முகாம்களிலும் மேலதிக விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

இம் முகாம்களில் தங்கியிருக்கும் மக்களின் நன்நீர் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக சகல முகாம்களிலும் நீர்த் தாங்கிகள் வைக்கப் பட்டு நந்நீர் விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது 162- ரி

# தற்போதைய ஜனாதிபதி ஆட்சி முறையே நாட்டிற்கு உகந்தது

## — ஜே. ஆர். கருத்து

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிக்க வேண்டுமென்று தற்போது பிரசாரம் செய்யும் ஐ. தே. கட்சி அரசியல் வாதிகள் முன்னர் இதே ஜனாதிபதி முறைமையை ஏகமனதாக நிறைவேற்றியவர்களாவர்.

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா தெரிவித்தார்

அவர்மேலும் கூறியதாவது: தற்போது ஐ. தே. க வில் பதவி வகிப்பவர்கள் என்னோடு அரசியலில்வளரவுமில்லை அல்லது என்னால் அரசியல் பயிற்சி அளிக்கப்படவுமில்லை. எனக்கு அப்போது ஆலோசனை வழங்கிய 10 பேரும் இப்போது இல்லை. திரு. றணில் கூட அப்போது அந்தக் குழுவில் இருக்கவில்லை.

தற்போதைய ஜனாதிபதி முறைமையே நாட்டிற்கு உகந்தது. எதற்கும் நானும் இருந்து அதை பார்க்கத்தான் போகிறேன் எது நாட்டிற்கு ஏற்றது என்பதை. இந்த முறை வந்த பின்பே வடக்கு கிழக்கு பிரச்சினை தோன்றியதாக கூறுவது தவறானது. வடக்கு கிழக்கு பிரச்சினை அரசியல் திருத்தத்தால் தோன்றவில்லை. அது இன ரீதியிலேயே தோன்றலானது.

வடக்கில் உள்ளவர்களும் ஐக்கிய இலங்கையில் வாழ விரும்பினால் சமஷ்டிமுறையை கொண்டுவரலாம் நான் பதவி வகித்தபோது நிலைமை வேறு. அப்போது சமஷ்டிமுறையை வழங்கியிருந்தால் நாடு பிரிந்து இருக்கும்.

தென் ஆபிரிக்கா, ஐக்கிய அமெரிக்கா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகள் சமஷ்டி முறைமையை கொண்டு வந்ததாலேயே அந் நாடுகள் முன்னேற்றம்கண்டுள்ளதுஎன்றும் அவர் கூறினார். கே- ரி

# யாழ். ஆஸ்பத்திரியில் 'எக்ஸ்றே' எடுப்பது மட்டுப்படுத்தப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் எக்ஸ்றே எடுக்கும் பிலிம்களுக்கு தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

தற்போதைய சூழ்நிலையில் ஷெல் குண்டு வீச்சுகளுக்கு இலக்காகி வருவோரின் எண்ணிக்கை வைத்தியசாலையில் அதிகரித்துள்ளன.

இதனை தொடர்ந்துஎக்ஸ்றே பிலிம்களுக்கும் தட்டுப்பாடு நிலவி வருகின்றன.

இதனால் கடுமையாக பாதிக்கப் பட்டவர்களுக்கே எக்ஸ்றே படம் எடுக்கப் பட்டு வருகின்றதோடு எக்ஸ்றே படம் எடுப்போரின் தொகையும் மட்டுப்படுத்தப் பட்டுள்ளன. 170

# யாழ். ஆஸ்பத்திரியில் மேல் மாடி நோயாளர்கள் கீழ்ப்பகுதிக்கு மாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பகுதியில் இடம்பெற்று வரும் ஷெல் மற்றும் விமானக் குண்டு வீச்சுக்களை அடுத்து யாழ் போதனா வைத்தியசாலை நிர்வாகம் நோயாளரின் பாதுகாப்பிற்காக சில மாற்றங்களை மேற்கொண்டுள்ளது.

மேல் மாடிகளில் அமைந்திருக்கும் நோயாளர் விடுதிகளில் கிகிச்சை பெற்றுவரும் நோயாளர்களை அவ் விடுதிகளில் இருந்து மாற்றி கீழ் விடுதிகளில் தங்கவைத்துள்ளனர்.

கீழ் உள்ள விடுதிகளில் சில வற்றில் இருந்து நோயாளரை ஒதுக்கி விடப்பட்ட பகுதிகளில் மேல்மாடி நோயாளர் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த காலங்களில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கைகளின் போது ஏற்பட்ட அசம்பாவிதங்கள், நோயாளர் உயிரிழப்புக்களை மனதில் கொண்டே முன்னேற்பாடாக இக்காரியங்கள் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப் பட்டது. -90

# முதலுதவியாளருக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

மக்கள் நலன்புரிச் சங்க முதலுதவித் தொண்டர்கள் அனைவரையும் இன்று காலை 9 மணிக்கு நல்லூர் மங்கையற்கரசி மகா வித்தியாலயத்தில் சந்திக்குமாறு கேட்கப் படுகிறது.

# கொழும்புத்துறையில் பொதுஇடங்கள், வீடுகளில் 2,000 அகதிகள் தஞ்சம்

(கொழும்புத்துறை)

தொல்புரம், மூளாய், சுளிபுரம், நவாலி ஆகிய இடங்களைச் சேர்ந்த சுமார் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட அகதிகள் கொழும்புத்துறை, மணியம் தோட்டம், பூம்புகார், அரியாலைப் பகுதிகளிலும், உறவினர் வீடுகளிலும் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இதேவேளைகுருநகர், பாசையூர் பகுதி மக்களும் இரவில் இடம் பெயர்ந்து கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம் உட்பட வேறு இடங்களிலும் தங்கி வருகிறார்கள்.

வீதிகள் தோறும் குழந்தைகள் சகிதம் காலை தொடக்கம் மாலை வரை மூட்டை முடிச்சுகளுடன் மக்கள் அலைந்து திரிகிறார்கள். 154

ஷெல் தாக்குதலுக்கு அஞ்சி

# இரவு நேரத்தில் பாதுகாப்பு வலய பகுதியில் யாழ். நகர மக்கள் தஞ்சம்

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினர் நடத்தும் கண்மூடித்தனமான ஷெல் தாக்குதல்களுக்கு அஞ்சி கரையோரப் பகுதிகளில் வாழும் மக்கள் இரவு நேரத்தில் யாழ். நகர பாதுகாப்பு வலயத்தில் தஞ்சமடைந்து வருகிறார்கள்.

பெண்கள், குழந்தைகள், வயோதிபர்கள் உட்பட ஆயிரக்கணக்கான மக்கள் இரவு நேரங்களில் யாழ். நவீன சந்தைக் கட்டிடம் மற்றும் நகர வர்த்தக நிலையங்களின் கட்டிடங்களின் முன்பும் தங்கி வருகின்றனர்.

மாலையில் மேற்படி இடங்களுக்கு வரும் மக்கள் காலையில் தமது வீடுகளுக்கு திரும்புகின்றனர்.

கொட்டடி, நாவாந்துறை, குருநகர் மற்றும் யாழ். நகரப்பகுதிகளில் வாழும் மக்கள் இரவு நேரங்களில் தமது வீடுகளில் உறங்க அஞ்சி மேற்படி பாதுகாப்பு வலயப் பகுதிகளுக்கு செல்கின்றனர்.

இந்த மக்களின் வசதி கருதி நவீன சந்தை வெளிக் கதவுகள் யாவும் இரவு நேரததில் திறந்து விடப்படுகிறது.

இப் பகுதிகளில் இருந்து பாதுகாப்புத்தேடி இரவு நேரங்களில் வரும் மக்கள் தங்குவதற்கான சகல வசதிகளையும் யாழ் மாநகராட்சி மன்றம் மேற்கொண்டு வருகிறது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பாதுகாப்பு வலயப் பகுதியில் நவீன சந்தைக் கட்டிடம் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

பலாலி இராணுவ முகாமிலிருந்து யாழ். நகரப்பகுதியை நோக்கி அடிக்கடி ஆட்லறி ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருவது தெரிந்ததே.

இந்தச் ஷெல்களில் பல பொதுமக்கள் குடியிருப்புகள் மீது விழுந்து பெரும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

162- ரி

# நேற்றைய தாக்குதலில் நால்வருக்கு காயம்

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினர் மேற்கொண்ட ஷெல்கள் நேற்று கல்லுண்டாய் பொம்மைவெளிப் பகுதியில் வீழ்ந்து வெடித்துள்ளன.

கல்லுண்டாய் பகுதியில் வீழ்ந்து வெடித்த ஷெல்லுக்கு மூன்றுபேர் காயமுற்று யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஆர். தாசன் (வயது 12), எம். தவராசா (வயது 30), பி செல்வககுமார் (வயது 23) ஆகியோரே காயப்பட்டவர்களாவர். இவர்கள் மூவரும் புன்னாலைக்கட்டுவன் பகுதிகளை சேர்ந்தவர்கள்.

இதேவேளையில் அராலியில் நேற்றுக்காலை இடம்பெற்ற ஷெல் தாக்குதலில் இளைஞர் ஒருவர் காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனும க்கப்பட்டுள்ளார்.

என் ரவிச்சந்திரன் (வயது 25) எனபவரே ஷெல் தாக்குதலில் காயப்பட்டவராவார்.

இச்சம்பவம் நேற்றுக்காலை இடம்பெறறது 170-கி

# நவாலி தேவாலய தாக்குதல் குறித்து ஆயர் பேரவை பெரும் அதிர்ச்சி!

(கொழும்பு)

நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத் துயரச் சம்பவம் தொடர்பாகக் கத்தோலிக்க ஆயர் பேரவை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது,

மேற்படி பேரவையின் செயலாளர் நாயகம் வண. மல்கம் ரஞ்சித் வெளியிட்டுள்ள அறிக்கையில், இத்துயரச் சம்பவம் குறித்துப் பேரவை பெரும் அதிர்ச்சி அடைந்துள்ளது. இக்குண்டு வீச்சில் உயிரிழந்தவர்களுக்கும், காயமடைந்தவர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இச்சம்பவம் குறித்துப் பக்க சார்பற்ற விசாரணை ஒன்றை நடாத்துததற்கு ஜனாதிபதி எடுத்த முயற்சியை, ஆயர் பேரவை வரவேற்கின்றது.

இத்தகைய துயரச் சம்பவங்கள் மேலும் நிகழாது இருப்பதை உறுதிப்படுத்தும்படி பேரவை அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கின்றது.

இலங்கையில் உள்ள அனைத்துச் சமூகங்களிடையேயும் புரிந்துணர்வை ஏற்படுத்திச் சமாதானத்தை நிலைநாட்ட, அனைத்துக் கத்தோலிக்க மக்களையும், நல்ல மனம் கொண்ட ஏனைய மக்களையும் பிரார்த்திக்கும்படி கத்தோலிக்க ஆயர் பேரவை கேட்டுக்கொள்கின்றது. விரி

# பாடசாலை அதிபர் நியமனத்தில் தகுதியை கருத்திலெடுக்க கோரிக்கை

(நல்லூர்)

வடமாகாணத்தில் ஒன்று ஏ, பி, சி தரப் பாடசாலைகளில் ஏற்படும் அதிபர் வெற்றிடங்களை நிரப்பும்போது முறையாக விளம்பரப்படுத்தி நேர்முகத் தேர்வு வைத்து திறந்த ரீதியில் தகுதியானோர்கள் நியமிக்கப்படவேண்டும். சிபார்சுகளோ, செல்வாக்குகளோ, தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளோ இன்றி தகுதி அடிப்படையில் திறமையானவர்களுக்கே நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என வடமாகாண அதிபர்கள் சங்கம் கோரியுள்ளது.

அண்மையில் நடைபெற்ற வடமாகாண அதிபர்கள் சங்கக் கூட்டத்தில் மேற்படி தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

மேற்படி கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:

இரண்டாம் தவணைப் பரீட்சைக்கான காகிதாதிகள் அரச அதிபர்மூலம் கல்விப் பணிப்பாளர்கள் பெற்று பரீட்சைகளுக்கு நியாய விலைக்கு வழங்கப்படவேண்டும்.

பதிலாசிரியரின்றி ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்படும்போது அதிபர்களுடன் ஆலோசனை செய்யப்படவேண்டும்.

வெட்டுப்புள்ளியால் பாதிக்கப்பட்ட மாணவர்களுடைய போராட்டத்திற்கு அதிபர் சங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க பணஉதவி புரிந்த பாடசாலைகளின் அதிபர்களுக்கு நன்றிதெரிவித்தல் போன்ற தீர்மானம் அங்கு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன. 175-கி-ரி

# இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தில் மருந்துகளுக்கு பெரும் தட்டுப்பாடு

[நல்லூர்]

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தில் மருந்துகளுக்கு பெரும் தட்டுப்பாடு ஏறபட்டுள்ளது. தற்போது கப்பல் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதால் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கு மருந்துகள் வரவில்லை என நேற்று செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையில் பிரிவு நிர்வாகத்தினர், தொண்டர்கள் ஆகியோருக்கான கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது.

அத்தியாவசிய சேவைகளுக்கு மட்டும் தற்போது கையிருப்பில் உள்ள மருந்துகளை பாவிக்கும்படி யாழ். கிளை நிர்வாகத்தினருக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தால் கூறப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் பிரிவுத் தலைவர்கள் பிரிவு முகாம்களுக்கு மருந்து வசதிகள் செய்துதருமாறு கேட்டபோது பிரிவுகளுக்கு மருந்துகள் வழங்க முடியாதெனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இராணுவ நடவடிக்கையால் காணாமல் போயுள்ளவர்களின் தரவுகளை இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைக்கு அனுப்பி வைக்கும்படி யாழ். கிளையின் செயலாளர் பேராசிரியர் வீ. கே. கணேசலிங்கம் கேட்டுள்ளார்.

இதுசம்பந்தமான விபரப் படிவங்கள் தேவைப்படுவோர் யாழ். கிளையில் அலுவலக நேரங்களில் விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்து உடன் சமர்ப்பிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளனர். -175-ரி

## அச்சுவேலி

(3ம் பக்கத் தொடர்ச்சி)

பர் தெரிவித்துள்ளார்.

தமிழீழ பொதுக் கல்வித் தெர்வுக்குத் தோற்றும் மாணவர்களின் நன்மைகருதி அவர்களுக்கு கணித, விஞ்ஞான விசேட செயல்முறை வகுப்புகளும் ஏனைய பாடங்களில் விசேட வகுப்புகளும் கோப்பாய் கணித விஞ்ஞான மூலவள நிலையத்தில் கற்பிக்கப் படுகிறது.

தமிழீழ இளநிலை, முதல் நிலைத் தேர்வுகளுக்குத் தோற்றும் மாணவர்களுக்கு கடந்த 5ம் திகதி முதல் 2ம் தவணை விடுமுறைகாலமுட்பட விசேட பயிறகிகள், செய்முறைப் பயிற்சிகள் புத்தூரில் தெரிவு செய்யப்பட்ட இடங்களிலும் கோப்பாய் கணித, விஞ்ஞான மூலவள நிலையத்திலும் அறிவியற் சழகத்திலும் நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 175-கி-ரி

## விநியோகம்

(தாளையடி)

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்குள் வதியும் ஊனமுற்றோருக்கு மூன்று முச்சக்கர வண்டிகள் வழங்கப்பட இருக்கின்றன.

கிராம சேவை அலுவலர்கள் ஊடாக விண்ணப்பங்கள் கோரப்பட்டு தெரிவுகள் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் அம்பன் பணிமனையில் வைத்து வழங்கப்படவிருக்கிறது. 163-கி

## புதன்கிழமை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நான்கு நாள் இராணுவ நடவடிக்கையின்போது 23 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் 138 படையினர்காயமடைந்ததாகவும் இராணுவ தலைமையகம் மேலும் தெரிவித்தது. கி

## தகவல் தாருங்கள்

அளவெட்டி தெற்கில் இருந்து இடம் பெயர்ந்து கொண்டாவில் வடக்கில் வசிக்கும் இ. அமலசுதன், அவரது மனைவி நவராணி, பிள்ளைகளான கலைச்செல்வன், துஷ்யந்தனி மற்றும் க. கந்தசாமி ஆகியோரைத் தேடுகின்றார்.

இவர்கள் பற்றித் தகவல் தெரிந்தவர்கள், கோண்டாவில் டிப்போவுக்கு முன்பாக உள்ள கலைவாணி வீதியில் தொடர்புகொள்ளவும்.

★

சுழிபுரம் மேற்கை வசிப்பிடமாகக் கொண்ட செல்லையா கந்தையா, அவரது மனைவி லட்சுமி ஆகியோரைக் காணவில்லை.

இவர்கள் தொடர்பான தகவலை, த. தியாகராசா, 450, யாழ் மினி, ஐந்து சந்தி, யாழ்ப்பாணம் எனற முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

★

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க சண்டிலிப்பாய் பிரிவின் முன்னாள் செயலாளரும், அங்கத்தவருமான சிவக்கொழுந்து சிவசுப்பிரமணியம் கடந்த திங்கட்கிழமை சண்டிலிப்பாயில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது காணாமல் போயுள்ளார்.

இவரைப் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளைக்குத் தெரிவிக்கும்படி கேட்கபபட்டுள்ளனர்.

## மரத்திலிருந்து வீழ்ந்து மரணம்

(யாழப்பாணம்)

சீவல் தொழிலை மேற்கொண்ட ஒருவர் பனைமரத்திலிருந்து தவறி வீழ்ந்து மரணமான சம்பவம் யாழ். அரசடிப் பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்றது.

யாழ். பருத்தித்துறை வீதி மூன்றும் ஒழுங்கையில் வசிப்பவரான எஸ். முத்துக்குமார் (வயது-45) என்பவரே மரணமானவராவார்.

-59-170-கி

## பங்கீட்டுப் பொருள்கள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா இராணுவம் மேற்கொண்டுள்ள 'லீப் பாவேட்' நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்தவர்களுககான ஒருவார இலவச உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு இடம்பெயர்ந்தவர்கள் தமது புகலிடங்களுக்கு அண்மையிலுள்ள கிளைகளில் தமது பங்கீட்டு அட்டைகளை சமர்ப்பித்து, அரிசி, மாவு, சீனி ஆகிய உலர் உணவுப் பொருட்களை பங்கீட்டு அடிப்படையில் கட்டுப்பாட்டு விலைக்கு பெற்றுக்கொள்ளலாமென யாழ். ப. நோ. கூ. சங்கம் அறிவித்துள்ளது.

சங்க எல்லைக்குட்பட்டவர்களது வைகாசிமாத கடைசி இருவார 27பி புள்ளிக்கான இலவச உலர் உணர்வு விநியோகமும், வறுமை நிவாரண உணவு முத்திரை 10வது சுற்றின் 1ம், 2ம் இலக்க புள்ளிக்கான விநியோகமும் நடைபெற்றுவருகின்றன.

பாவனையாளரது நலன்கருதி நாளை சனி, ஞாயிறு ஆகிய இருதினங்களிலும் சங்க கிளைகள் யாவும் முழுநாளும் திறக்கப்பட்டிருக்கும் எனவும் மேற்படி சங்கம் அறிவித்துள்ளது. கி

## இடம்பெயர்ந்த சேரன் பல்பொருள் வாணிப ஊழியர்களுக்கான அறிவித்தல்

சேரன் பல்பொருள் வாணிப நிறுவனத்தில் பணியாற்றும் ஊழியர்களில் இராணுவ ஆக்கிரமிப்பினால் இடம் பெயர்ந்துள்ள ஊழியர்கள் அனைவரும் தற்போது தங்கியிருக்கும் முகவரியினையும், தங்கள் நிலையினையும் சேரன் பணிமனையில் [கேணல் கிட்டுசாலை - யாழ்ப்பாணம்] பதிவுசெய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மேலும் எமது நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்களின் குடும்பத்தினர் இடம் பெயர்ந்திருந்தால் இவர்கள் பற்றி அறிய ஆவலாக உள்ளவர்களும் மேற்படி எமது ஊழியர்களை தொடர்பு கொள்ள விரும்புவோரும் எமது பணிமனையில் விபரத்தை பதிவுசெய்யும்படி கேட்டுக் கொள்ளுகின்றோம்.

- சேரன் நிர்வாகம்

[எ 5103]

### செஞ்சிலுவை தலைமையகத்துக்கு

# யாழ். நிலைமை குறித்து அறிக்கை அனுப்ப ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். வதிவிடப் பிரதிநிதி தற்போதைய யாழ். நிலைமை குறித்து ஜெனிவாவிலுள்ள தலைமை அலுவலகத்திற்கு அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்கவுள்ளார்.

கொழும்பு தலைமை அலுவலகத்தினூடாக இவ்வறிக்கை ஜெனிவாவுக்கு அனுப்பப்படவுள்ளது.

இதன்பொருட்டு அவர் வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் பகுதிகளிலுள்ள இடம்பெயர்ந்தோர் முகாம்களுக்கு நேற்று விஜயம் செய்து விபரங்களைச் சேகரித்தார்.

வலிகாமத்திலிருந்து இடம்பெயர்ந்தோர் முகாம்களில் எதிர்நோக்கப்படும் உணவு, சுகாதார வசதிகள் குறித்தும் அவர் கேட்டறிந்து கொண்டார்.

முகாம்களில் மருந்து, தொற்று நீக்கிகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாக எடுத்துரைக்கப்பட்டது.

இடம்பெயர்ந்தோர் முகாம்கள் மீது திட்டமிட்ட அடிப்படையில் மேற்கொள்ளப்படும் விமான, ஷெல் தாக்குதல்களை நிறுத்துமாறு அவரிடம் அங்கு தங்கியிருந்த மக்கள் கேட்டுக்கொண்டனர்.

நவாலியில் விமானப் படையினால் அழிக்கப்பட்ட சென். பீற்றர்ஸ் தேவாலயத்தையும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வதிவிடப் பிரதிநிதி நேற்றுப் பார்வையிட்டார்.

-க-கி

## சர்வதேச நலன்புரிஅமைப்பு வடக்கிற்கு தேவை

[கொழும்பு]

இராணுவநடவடிக்கைஒன்று ஆரம்பிக்கப்படுகையில் ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பினர்களைக் கொண்ட சர்வதேச மனித நலன்புரி அமைப்பு ஒன்றையும், விசேட வைத்திய சேவை அலகு ஒன்றையும் வடக்கில் அமைக்க வேண்டுமென சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஸ்ரீலங்கா ஜனாதிபதியை கேட்டிருக்கிறது.

'லங்கா தீப' என்ற சிங்களப் பத்திரிகை இது குறித்த செய்தியை பிரசுரித்தது. தீ-கி

### வலிகாமம்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வழிப்போக்கர்கள்மீது மேற்கொள்ளப்பட்ட விமான, ஷெல் தாக்குதல்களினால் சிறுவர், பெண்கள், வயோதிபர்கள் உட்பட 222 க்கும் அதிகமான பொதுமக்கள் பலியானார்கள். நூற்றுக்கணக்கானோர்கள் படுகாயமுற்று அங்கவீனமானார்கள். பல கோடி ரூபா பெறுதியான சொத்துக்கள் நாசமாக்கப்பட்டன. கி

## தென்மராட்சி முகாம்களுக்கு அரச அதிபர் விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. கே. பொன்னம்பலம் நேற்று தென்மராட்சிபகுதிக்கு விஜயத்தைமேற்கொண்டார்.

தென்மராட்சிப் பகுதியிலுள்ள இடம்பெயர்ந்தோர் அகதி முகாம்களுக்கு சென்ற அரசாங்கஅதிபா இடம்பெயர்ந்த மக்களின் குறைகளை நேரில் கேட்டறிந்தார். காலையில் சென்ற அரச அதிபர் மாலையே செயலகம் திரும்பினார். 170-162-கி

# வலிகாமம் மேற்கு பகுதியில் நேற்றும்புக்காரா,ஷெல்தாக்குதல்கள்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் பகுதிகளைநேற்று காலை வட்டமிட்ட புக்காரா விமானமொன்று அப்பகுதியில் குண்டுவீச்சு தாக்குதலை மேற்கொண்டது,

இப்பகுதியில் இரண்டு தடவைகள் புக்காரா விமானம் குண்டுவீச்சு தாக்குதலை மேற்கொண்டு விட்டுச் சென்றது.

வட்டுக்கோட்டை, சண்டிலிப்பாய், கட்டுடை பகுதியிலேயே இக்குண்டுகள் வீழ்ந்து வெடித்தன.

இதனைவிட இராணுவத்தினர் வலிமேற்கு பகுதிகளை நோக்கி தொடர்ச்சியான ஷெல் தாக்குதலை மேற்கொண்டு வருகின்றனர். 90-170-கி

# உலகில் வேதனையுறும் தமிழர்க்கு குரல் கொடுக்க தயங்கோம்! திருச்சியில் வை. கோ.

(திருச்சி)

எங்கே தமிழ் மொழி ஆட்சி மொழியாக இருக்கின்றதோ அந்த நாடுதான் எங்கள் நாடு என மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச்செயலர் வை. கோபாலசாமி தெரிவித்துள்ளார்.

திருச்சியில் கண்காட்சி ஒன்றைத் திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் தமிழ் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் இந்தியை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள மாட்டோம். சமூக நீதிதான் எங்கள் கொள்கை. உலக நாடுகளில் எங்கே தமிழர்கள் வேதனைப் படுகிறார்களோ அவர்களுக்காக மறுமலர்ச்சி தி.மு.க. குரல் கொடுக்கத் தயங்காது எனவும் அங்கு வை.கோபாலசாமி தொடர்ந்தும் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

உலகில் தமிழர்கள் வாழும் நாடுகளின் வரைபடங்கள், இந்திய மீனவர்களை இலங்கை கடற்படையினர் சுட்டுக் கொல்லுவதை சித்தரிக்கும் புகைப்படங்கள் என்பனவும் தமிழக காவல் நிலையங்களில் நிகழும் அட்டூழியங்கள், பண்டைத் தமிழர்களின் வீரத்தை குறிக்கும் ஓவியங்கள் என்பனவும் இக்கண்காட்சியில் இடம் பெற்றிருந்தன. கி

## ஒருவாரகால நிவாரணம் இன்று முதல் வழங்கப்படும்

[யாழ்ப்பாணம்]

வலிகாமத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு நிவாரண பெர்மிட் வழங்கும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

இடம்பெயர்ந்த மக்களுக்கு ஒருவார காலத்துக்கான விசேட நிவாரணத்தை யாழ் செயலக புனர்வாழ்வுப் பகுதியினர் வழங்கவுள்ளனர்.

இதற்கான பெர்மிட்டுக்களையே பிரதேச செயலாளர்கள் மூலம் வழங்கி வருகின்றார்கள்.

இதற்கான உணவுப் பொருட்கள் வழங்கும் வேலைகளை பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் இன்று தொடக்கம் மேற்கொள்ளுமென்று செயலக புனர்வாழ்வுப் பகுதியினர் தெரிவித்துள்ளனர். 170 கி

## இன்று கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பொதுமுகாமையாளர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் இன்று 14-ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு யா. ம. கூ. சபை மண்டபத்தில் நடைபெறும்.

இக் கலந்துரையாடலில் தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் திரு. சு. டொமினிக், கூட்டுறவுப் பொறுப்பாளர் திரு. பரவி ஆகியோர் கலந்து கொள்வர். தலைவர்கள், பொதுமுகாமையாளர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். -170-கி

## சகல முகாம்களிலும் முதலுதவி சிகிச்சை வசதி

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருக்கும் சகல முகாம்களிலும் முதலுதவிச் சிகிச்சைப் பெட்டிகள் வைக்கப்பட்டு முதலுதவிச் சிகிச்சை அளிக்கப்பட்டுவருகிறது.

யாழ். மாநகராட்சிமன்ற சுகாதாரப் பகுதியினரால் முதலுதவிச் சிகிச்சைப் பெட்டிகள் வைக்கப்பட்டு இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியிருக்கும் மக்களுக்கு முதலுதவிச் சிகிச்சை அளிக்கப்படுகிறது. மாநகராட்சிமன்ற சுகாதாரப் பணியாளர்களால் முதலுதவிச் சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தினமும் காலை 6 மணி தொடக்கம் பிற்பகல் 7 மணி வரை இச்சேவை நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. 162-கி

## தமிழர்புனர்வாழ்வுக்கழகம் நிவாரணப் பணிகள்

[யாழ்ப்பாணம்]

வலிகாமம் வடக்குத் தெற்குப் பகுதிகளில் நடைபெற்றுவரும் போர் நடவடிக்கையால் பாதிக்கப்பட்டு இப்பகுதிகளில் இருந்துஇடம்பெயர்ந்து யாழ் நகரில் முகாம்களில் தங்கியிருக்கும் இலட்சக்கணக்கான மக்களுக்கு நிவாரணப்பணிகளை தமிழர் புனர்வாழ்வுக்கழகம் பிரதேச செயலகங்கள் மேற்கொண்டுவருகின்றன.

யாழ். நகரில் உள்ள பல கல்லூரிகளிலும் ஆலயங்கள் தேவாலயங்களிலும் தஞ்சமடைந்திருக்கும் மக்களுக்கே இந்நிவாரணப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. இவர்களுக்கு சமைத்த உணவுகளை மேற்படி அமைப்புகள் வழங்கி வருகிறது. 162-கி

## ஏற்பினால் சிறுமி மரணம்

(நெல்லியடி)

சயிக்கிள் விபத்தில் காலில் காயமடைந்து மந்திகை மருத்துவ மனையில் சுமார் 45 நாட்கள் சிகிச்சை பெற்ற இரண்டு வயதுப் பெண் சிறுமி ஏற்புவலியினால் கடந்த செவ்வாய்க்கிழமை மரணமானார்.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஸ்ரீஸ்கந்தராசா ஜனனி (வயது 4) என்னும் சிறுமியே இவ்வாறு மரணமடைந்தார். (160

### இராணுவ

(1ம் பக்கத் தொடர்சி)

பொதுமக்களை விடுவிப்பதென்ற போர்வையில் இன அழிப்பு வேலைகள் தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் நடைபெற்று வருவதை உங்கள் மூலம் சர்வதேச சமூகத்துக்குத் தெரியப்படுத்தவிரும்புகிறோம்.

இதனால் அப்பாவிப் பொதுமக்கள் சொல்லொணாத் துன்பங்களுக்கு ஆளாகி வருகின்றார்கள். விமானத் தாக்குதல்கள், மற்றும் ஷெல் தாக்குதல்கள் பல திசைகளிலிருந்தும் நடைபெற்று வருகின்றது. பொதுமக்கள் பலர் கொல்லப்பட்டதோடு வகைதொகையின்றி மக்கள் அங்கவீனமாகியுள்ளார்கள்.

யாழ். போதனா வைத்தியசாலைப் பிரேத அறை சடலங்களால் நிரம்பி வழிகின்றது வைத்தியசாலை வார்ட்டுக்களில் இடமின்மை காரணமாக கதவோரங்களிலும், விறாந்தைகளிலும் காயத்துக்குள்ளானவர்கள் நோயாளர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். இதைவிடப் பல இடங்களில் உறவினர்களால் பிரேதங்கள் எரிக்கப்பட்டும்' புதைக்கப்பட்டுமுள்ளன. எல்லாமாக 300 க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டிருப்பதாக அஞ்சப்படுகிறது.

ஷெல், மற்றும் விமானத் தாக்குதல்களுக்கு அஞ்சி பாதுகாப்பு தேடி பொதுமக்கள் இராணுவ நடவடிக்கை நடைபெறும் இடங்களிலிருந்து தூர உள்ள அகதிமுகாம்களில் தங்கியுள்ளனர். யாழ். பல்கலைக்கழகத்தில் அதிகளவு மக்கள் அகதிகளாகத் தங்கியுள்ளார்கள். இடம்பெயர்ந்த மக்களின் தொகை மூன்று லட்சமெனக் கணிப்பிடப்பட்டுள்ளது. மருந்து, உணவு வகைகள் மற்றும் அத்தியாவசிய பொருட்கள் தட்டுப்பாடு காரணமாக இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவுவது கஷ்டமாக உள்ளது.

அரச தொடர்புச் சாதனங்கள் இங்கு நிலவும் உண்மை நிலையைத் திரித்துக் கூறி உலகத்தின் கவனத்தை திசை திருப்பப் பார்க்கிறது. தமது உரிமைக்காகப் போராடும் தமிழினத்தின் மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் இராணுவ நடவடிக்கையின் நோக்கம் எமது மண்ணை அபகரிப்பதாகும் என்றும் அக்கடிதத்தில் மேலும், தெரிவிக்கப்பட்டுள்ளது. 162-கி

### யுத்தத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆஸ்பத்திரியில் பல பொதுமக்கள் கால் இழந்து, கை இழந்து ஊன நிலையிலிருந்தனர். அவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு போதிய மருந்துகள் இல்லை. உணவும் தட்டுப்பாடாக உள்ளது.

3 லட்சத்துக்கு மேற்பட்ட அகதிகள் பாடசாலைகளில், கோவில்களில் தஞ்சமடைந்துள்ளனர் என்றார். (கி)

### அகோர

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இரவுவரை மீட்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் இச்சம்பவத்தில் புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த இராசதுரை இராசா (17-வயது) பசுபதி செல்வக்குமார் (23-வயது) முத்து தவராசா [30 வயது] ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

காயமடைந்தவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். 90-கி

## மேலும் இருவர் மரணமாயினர்

[யாழ்ப்பாணம்]

வலிகாமம் பகுதியில் கடந்த ஐந்து நாட்களாக இடம்பெற்றுவரும் இராணுவ நடவடிக்கைகளின் ஆரம்ப நாட்களின் விமான, ஷெல் தாக்குதல்களினால் படுகாயம் அடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தவர்களில் இருவர் நேற்று மரணமாயினர்.

கடந்த ஒன்பதாம் திகதி சுழிபுரம் பகுதியில் ஷெல் தாக்குதலுக்கிலக்காகி காயமடைந்த ரி. குணதீசன் [வயது-52] தாவடியில் கடந்த பத்தாம் திகதி இடம்பெற்ற புக்காரா விமானக் குண்டு வீச்சில் படுகாயம் அடைந்த க. தினேசு (வயது-12] ஆகிய இருவருமே மரணமானவர்களாவர். -90-கி

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் [illegible] தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, [illegible] இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு ஜூலை மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post Office Sri Lanka under License number B/1683613.